www.kedu.lk

Smart Flex வெளியீடு

செயலமர்வு - 01

Smart Flex

தரம் 05

புலமைப் பரிசில் பரீட்சை

மாதிரி வினாத்தாள் 01

M.P.KAJAN - MODEL PAPERS

M.P.KAJAN - MODEL PAPER

சுட்டெண் :..... 45 நிமிடங்கள்

எல்லா வினாக்களுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க

1. தைமாதம் 3ஆம் திகதி வியாழக்கிழமை ஆகும். அம்மாதத்தில் வருகின்ற சனிக்கிழமைத் திகதிகளின் கூட்டுத்தொகை யாது?
   1) 80 2) 75 3) 74

2. ஒரு போட்டியொன்றில் 15 மாணவர்கள் சம இடைவெளியில் வட்டமாக நின்றனர். ஒரு இடைவெளியில் இரண்டு கதிரைகள் வைக்கப்பட்டிருந்தன. இதில் 15 மாணவர்களுக்கிடையே வைக்கப்பட்ட கதிரைகளின் எண்ணிக்கை யாது?
   1) 28 2) 30 3) 15

3. ஆங்கில பாடப்பரீட்சை ஒன்றில் தருண் 22 வினாக்களுக்கு மட்டுமே சரியான விடை எழுதி 64 புள்ளிகளை பெற்றான். வினாக்கள் சிலவற்றிற்கு 2 புள்ளிகளும் சிலவற்றிற்கு 4 புள்ளிகளும் வழங்கப்பட்டன. எனின் தருண் சரியாக விடை எழுதிய 2 புள்ளிகளுக்குரிய வினாக்கள் எத்தனை?
   1) 12 2) 10 3) 11

4. மாலா தந்தை கொடுக்கும் பணத்தில் ஒரு பகுதியை சேமித்து வந்தாள். முதல் வாரத்தில் சேமித்த பணத்தின் இரு மடங்கை இரண்டாம் வாரத்திலும், இரண்டாம் வாரத்தில் சேமித்த பணத்தின் இருமடங்கை மூன்றாம் வாரத்திலும் சேமித்தாள். அவள் இறுதியாக வைத்திருந்த பணம் ரூபாய் 220.00 எனின் முதல் வாரத்தில் சேமித்த பணம் எவ்வளவு?
   1) ரூபாய் 55.00 2) ரூபாய் 220.00 3) ரூபாய் 150.00

5. மாணவன் ஒருவனிடம் சில பந்துகள் இருந்தன. அதனுடன் மேலும் ஒரு பந்தைச் சேர்த்தால் நால்வருக்குச் சமமாகப் பகிர்ந்து கொடுக்க முடியும். அவ்வாறு இல்லையேல் அதில் ஒரு பந்தைக் குறைத்தால் இருவருக்குச் சமமாகப் பகிர்ந்து கொடுக்கலாம். எனின் மாணவனிடமிருந்த பந்துகளின் எண்ணிக்கை யாது?
   1) 27 2) 22 3) 25

6. ராஜாவிடம் இருந்த பணத்தொகையை விட 25 ரூபா கூடுதலாக ஆஷாவிடம் இருந்தது. ஆஷா 15 ரூபாவை ராஜாவுக்குக் கொடுத்தால், ராஜாவிடம் உள்ள பணத்தொகை ஆஷாவிடம் உள்ள பணத்தொகைகளிலும்
   1) ஐந்து ரூபாவினால் கூடியது.
   2) பத்து ரூபாவினால் கூடியது.
   3) பத்து ரூபாவினால் குறைவானது

7. குமரன் ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெய் வைத்திருந்தான். அவன் 75 மில்லிலீற்றர் கொண்ட பல சிறிய போத்தல்களில் நிரப்பிக் கொண்டிருந்தான். கடைசிப் போத்தல் குறையாக இருந்தது. அதனைப் பூரணமாக்குவதற்கு தேவையான தேங்காய் எண்ணெயின் அளவு யாது?
   1) 40மில்லிலீற்றர் 2) 25மில்லிலீற்றர் 3) 50மில்லிலீற்றர்

M.P.Kajan

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

தரம் 5

zoom

அனுமதிகளுக்கு

76667-4945

சுற்றாடல்	புதன் வெள்ளி –	மாலை	6.15 – 7.15
ஆங்கிலம்	செவ்வாய் –	மாலை	7.00 – 8.00
தமிழ்	சனி ஞாயிறு –	மாலை	7.15 – 8.15
கணிதம்	சனி ஞாயிறு –	காலை	6.00 – 7.00
சிங்களம்	வியாழன் –	மாலை	7.10– 8.00
SPOKEN ENGLISH	சனி –	காலை	9.00– 10.00

நுண்ணறிவு (பிரிவு–1) – சனி ஞாயிறு – மாலை 6.15–7.10

நுண்ணறிவு (பிரிவு–2) – சனி ஞாயிறு – காலை 7.00–8.00

VIDEO RECORDING வழங்கப்படும் மாதம் – 1500/=

www.lkedu.lk


8. ஆறு கோழிகளினதும் மூன்று பசுக்களினதும் கால்களின் மொத்த எண்ணிக்கை தொடர்பாக கூறக்கூடிய சரியான கூற்று பின்வருவனவற்றில் எது?
   1) கோழிகளின் கால்களின் எண்ணிக்கையும் பசுக்களின் கால்களின் எண்ணிக்கையும் சமமானவை
   2) கோழிகளின் கால்களின் எண்ணிக்கை பசுக்களின் கால்களின் எண்ணிக்கையின் இரு மடங்காகும்
   3) கோழிகளின் கால்களின் எண்ணிக்கை பசுக்களின் கால்களின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் இரண்டு அதிகமானது

9. நிறுவனம் ஒன்று 2014ஆம் ஆண்டு வெள்ளி விழாவினை நிறைவு செய்தது. அந்நிறுவனம் தனது நிறுவனத்தின் வைர விழாவினை எத்தனையாம் நூற்றாண்டு தசாப்தத்தில் கொண்டாடும்?
   1) 20ஆம் நூற்றாண்டு 5ஆம் தசாப்தம்
   2) 21ஆம் நூற்றாண்டு 4ஆம் தசாப்தம்
   3) 21ஆம் நூற்றாண்டு 5ஆம் தசாப்தம்

10. சிம்லாவின் அம்மா சிம்லாவின் பாடசாலை உணவு வேளையை ஒரு ஒழுங்கு முறையிலே கொடுப்பார். திங்கட்கிழமை பிட்டும், செவ்வாய்க்கிழமை சோறும், புதன்கிழமை நூடில்சும் மீதி இரண்டு நாட்களுக் கும் தானிய உணவுகளையும் கொடுப்பார். இம்மாதம் 3ஆம் திகதி சிம்லாவுக்கு கிடைத்தது நூடில்ஸ் என்றால் 10ஆம் திகதி என்ன கிழமை?
   1) திங்கட்கிழமை 2) புதன்கிழமை 3) செவ்வாய்க்கிழமை

11. என்னிடம் ரூபா 750.00 இருந்தது, தம்பியிடம் ரூபா 350.00 இருந்தது. தம்பி தன்னிடம் உள்ள பணத்தில் எவ்வளவு பணத்தை எனக்கு கொடுத்தால் தற்பொழுது தம்பியிடம் இருக்கும் பணத்தின் இரு மடங்கிலும் ரூபா 200.00 அதிகமான பணம் என்னிடம் இருக்கும்?
   1) ரூபா70.00 2) ரூபா 50.00 3) ரூபா100.00

12. ஒரு குறித்த சம்பவம் தொடர்பான ஆறு படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. படங்களைச் சரியான தொடரில் கொண்ட விடையைத் தெரிவு செய்க



A B C

D E F

1) DECFBA 2) BDCEAF 3) CFADBE

M.P.Kajan - Teacher @leading National School in Colombo, 070 6868 680

www.lkedu.lk

13. நான்கு யோக்கட்களை வாங்கும் ஒருவருக்கு ஒரு யோக்கட் மேலதிகமாக வழங்கப்படுமென கடைக்காரார் கூறிக்கொண்டு வியாபாரம் செய்தார். அப்போது அங்கு வந்த அதீரன் 15 யோக்கட்களை வீட்டிற்கு கொண்டு சென்றான். ஒரு யோக்கட்டின் விலை ரூபா 35 எனின் அதீரன் யோக்கட் வாங்க செலவழித்த பணம் எவ்வளவு?

1) ரூபா 525 2) ரூபா 420 3) ரூபா 375

14. தொழிலாளர்கள் நால்வர் வேலை முடித்து வெளியேறும் நேரங்கள் கடிகாரங்களில் காட்டப்பட்டுள்ளன


சுரேஸ்


வாமன்


பானுசன்


அகிலன்

இவர்கள் ஒவ்வொருவரும் பத்து நிமிடங்கள் முந்தி வெளியேறுவார்களாயின் அதனைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1) சுரேஷ் - 2.50, வாமன் - 7.20, பானுசன் - 7.50, அகிலன் - 6.25
2) சுரேஷ் - 2.55, வாமன் - 6.20, பானுசன் - 7.45, அகிலன் - 6.20
3) சுரேஷ் - 3.00, வாமன் - 7.30, பானுசன் - 8.00, அகிலன் - 7.35

- பின்வரும் தகவல்களைக் கொண்டு 15, 16 ஆகிய வினாக்களுக்கு விடை தருக
  - ஒரு குடும்பத்தில் தபீசன், ரதுஷா, நிரேஷ், மாதுரி எனும் நான்கு சகோதர்கள் உள்ளனர்.
  - மாதுரிக்கு ஒரு தம்பியும் ஒரு தங்கையும் உண்டு.
  - தபீசன் ரதுஷாவின் தம்பி ஆவான்.

15. மாதுரி இக்குடும்பத்தின் எத்தனையாவது பிள்ளை

1) முதலாவது 2) மூன்றாவது 3) இரண்டாவது


16. நிரேஷின் வயது 18, தபீசனின் வயது 9 எனவே ரதுஷா, மாதுரி ஆகியோரின் வயதுகள் முறையே பின்வரும் எவையாக இருக்கலாம்


1) 15,12 2) 11,14 3) 19,6

17. ஆரம்ப பாடசாலை ஒன்றிலுள்ள ஆண்பிள்ளைகளின் எண்ணிக்கையிலும் பார்க்க பெண்பிள்ளைகளின் எண்ணிக்கை 10 குறைவாகும். அங்குள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை 180 எனின் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

1) 30 2) 85 3) 95

18. தரப்பட்டுள்ள வடிவத்தைக் கொண்டு ஒரு சதுரமுகியை அமைக்கும் போது அது தோற்றும் விதத்தை தெரிவு செய்க





M.P.Kajan - Teacher @leading National School in Colombo, 070 6868 680

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

புலமைப்பரிசில் பரீட்சை

நுண்ணறிவு

செவ்வாய் மற்றும் வியாழன்

காலை 5.00 மணி



zoom

Video Recording தரப்படும்

மாதக்கட்டணம் - 800/=


More Info - 76667-4945


www.lkedu.lk


19. கொப்பி ஒன்றின் விலை ரூபாய் 25.00 உம் பேனை ஒன்றின் விலை ரூபாய் 15.00 ஆகும். இனியவன் ரூபாய் 190.00 ஐக் கொடுத்து சில பேனைகளையும் சில கொப்பிகளையும் வாங்கினான். எனின் ரூபாய் 15.00 பெறுமதியுடைய பேனைகள் எத்தனை?

1) 6 2) 4 3) 10

20. மேசைத் தராசு ஒன்றில் சில பொருட்களின் நிறைகள் தரப்பட்டுள்ளன. மூன்றாவது தராசில் உள்ள பொருள்களின் நிறை யாது?







1) 7 kg 2) 9 kg 3) 8 kg

M.P.Kajan